# நுகர்வோர் பாதுகாப்பு
# CONSUMER PROTECTION

16
அத்தியாயம்

## நுகர்வோரியல்
## CONSUMERISM

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

–குறள் 659

ERU78

**பொருள் :**

பிறர் வருந்துமாறு செய்து பெற்ற பொருள் எல்லாம் பெற்றவன் வருந்துமாறு செய்து போய்விடும், நல்வழியில் வந்தவை இழக்கப்பட்டாலும் பிறகு பயன் தரும்.

### கற்றல் நோக்கங்கள்

இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்

- நுகர்வோர் சுரண்டப்படல்
- நுகர்வோரியலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம் .
- நுகர்வோர் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 ஆகியவற்றை அறிந்து கொள்ள இயலும்.

### அத்தியாயம் சுருக்கம்

16.01. நுகர்வோர்
16.02. நுகர்வோர் சுரண்டப்படல்
16.03. நுகர்வோரியல் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
16.04. நுகர்வோரியலின் முக்கியத்துவம்.
16.05. நுகர்வோரியலின் தோற்றம், பரிணாமம் மற்றும் வளர்ச்சி
16.06. நுகர்வோர் பாதுகாப்பு
16.07. நுகர்வோர் பாதுகாப்பின் தேவை
16.08. நுகர்வோர் சட்டங்கள்
16.09. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986
16.10. வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு வாங்குவோர்விழித்திரு கோட்பாடு
16.11. விற்பனையாளர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு தத்துவம்

தொழிற்புரட்சிக்கு முந்தைய காலங்களில் சமுதாய மக்களின் வாழ்வியல் அமைப்பு வெளித் தொடர்பு இன்மையின் காரணமாக அவர்களின் தேவை மிகக் குறைவாகவே இருந்தது. பெரும்பாண்மையான மக்கள் கிராமப்புறங்களிலேயே வசித்து வந்தனர், அவர்களுக்குத் தேவையான பொருட்களின் கணிசமான பகுதியை விவசாயிகள் உற்பத்தி செய்தனர். வணிகம் சிறிய அளவிலேயே நடைபெற்றுவந்தது. விவசாயத்தில் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை மட்டுமே உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்தனர். நாடு தொழில்மயமாக்கப்பட்டபோது, சமுதாயம் பன்முகப்படுத்தப்பட்டபோது மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் மூலம் மூலப்பொருட்கள் தங்களது இயல்புகளை மாற்றிக் கொண்டன. புதிய பொருட்கள் தோற்றம் பெற்றன. நுகர்வோரின் வியாபாரச் சார்புத் தன்மை அதிகரித்தது. நுகர்வோர் சார்புத்தன்மை மற்றும் வணிகப் பொறுப்புணர்வு ஆகியவை இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது. உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் அரசாங்கம் ஆகியவை வணிகத்தின் மூன்று முக்கியக் கூறுகள் ஆகும். வணிக உலகில் அதிக சுரண்டலுக்கு உள்ளாவது நுகர்வோர்கள் ஆவர். இந்த அத்தியாயம் நுகர்வோர் சுரண்டப்படுவது பற்றியும், நுகர்வோர் பாதுகாப்பு குறித்தும் விவரிக்கிறது.

## 16.01. நுகர்வோர்

உற்பத்தியாளரிடமிருந்து அல்லது விற்பனையாளரிடமிருந்து பொருட்களை வாங்குவோர் அல்லது பிறரால் உற்பத்தி செய்யப்பட்டு, விற்கப்படும் பொருட்களை பயன்படுத்துபவரே நுகர்வோர் ஆவர். வங்கிகள் போக்குவரத்து நிறுவனங்கள், காப்பீட்டு



12th Commerce Tamil Unit 6.indd 124 19/12/2022 14:47:37